## பூஜாபிடிய பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜனவரி 16 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பூஜாபிடிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த கனொன் இனத்தை சேர்ந்த அச்சு இயந்திரத்தின் மற்றும் பெக்ஸ் இயந்திரத்தின் பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான குழாய் கிணறு உடனான காணிகளின் எண்ணிக்கை 384 என பதிவேடுகளில் காட்டப்பட்டிருந்த போதும், கணக்குகளில் அவற்றில் 68 மாத்திரமே காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

---------------------------------------------------------------------------

தளபாடங்கள் உபகரணங்க் கணக்குகளின் பிரகாரம், கூட்டுத்தொகை ரூபா 3,456,349 ஆக காணப்பட்டதுடன், பட்டோலையின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 5,466,171 ஆக காணப்பட்டமையால் ரூபா 2,009,822 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

(அ) பெற வேண்டிய கணக்குகள்

-----------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 83,238,349 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 141,863 ஆக காணப்பட்டது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 64,409,507 இற்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியில் ரூபா 32,000,836 தொகை செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்பு தொகையாகக் காணப்பட்டதுடன் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 32,157,961 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------

02 கணக்கு விடயங்கள் தொடர்பான தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 6,489,828 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமான பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது.

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,061,347 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,471,138 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 1,590,209 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

2.2 தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

----------------------------------------------------------

மொத்த நடைமுறை சொத்துக்களுடன் நடைமுறை பொறுப்புக்கள் காட்டும் விகிதாசாரம் 1.2:1 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் போதான விகிதாசாரம் 1.3:1 ஆக காணப்பட்டமையால், அந்த விகிதாசாரங்கள் உச்ச மட்டத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. ஒட்டுமொத்த நடைமுறை சொத்துக்களில் நூற்றிற்கு 74 எனப்படும் ரூபா 34 மில்லியன் நிர்மாண வேலை மற்றும் பலவின கடன்பட்டோர் ஆக காணப்பட்டதுடன் மொத்த நடைமுறை பொறுப்புக்கள் நூற்றிற்கு 93 எனப்படும் ரூபா 36 மில்லியன் நிர்மாண வேலைகள் மற்றும் பலவின கடன் கொடுத்தோர் அடங்கியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

------------------------------

2.3.1 வருமான சேகரித்தல் செயலாற்றுகை

--------------------------------------------------------

தலைவரினால் மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

--------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா<br>000 | ரூபா<br>000 | ரூபா<br>000 |
| (i) | வீதவரி | 2,322 | 1,930 | 1,661 |
| (ii) | வாடகை | 1,407 | 1,024 | 358 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணம் | 2,421 | 1,936 | -- |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 13,080 | 12,474 | 6,237 |

2.3.2 வீதவரி

----------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 215,219 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது பில் போடப்பட்டவை ரூபா 2,370,426 ஆகும். ஆண்டின் போது அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 36 ஆக காணப்பட்டமையால் 2013 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு அறவிடப்படவேண்டிய தொகை ரூபா 1,639,342 வரை அதிகரித்து இருந்தது.

2.3.3 வாடகை

------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 357,575 இற்கான வாடகையை அறவீடு செய்வதற்கான முறையான நடவடிக்கை ஏதும் கடைபிடித்திருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

---------------------------------------------

2012 ஆண்டின் போது ஈ - நெனபியஸ விற்கான ரூபா 117,700 செலவில் கொள்வனவு செய்திருந்த 22 போதனா சாலை கதிரைகள் சுமார் ஒரு வருட காலம் கடந்தும் கொள்வனவு செய்திருந்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

3.2 ஒப்பந்த நிருவாகம்

--------------------------

படுகொட ரனவிரு மாவத்தையை அபிவிருத்தி செய்வதற்காக மற்றும் பதிராஜ பககதாராமயவின் நுழைபாதையின் அரைச் சுவர் நிர்மாணிப்பதற்காக ரூபா 233,765 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதும், அப் பாதையை சபைக்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 முறை சாராக் கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------

பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருற்களை அகற்றுதல், சாரதிகளின் நாளாந்த கடமைகளின் பகுதி ஒன்றாக காணப்பட்ட போதும், அதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த இரண்டு சாரதிகளுக்கு மீளாய்வாண்டு அக்டோபர் வரை ரூபா 49,616 இற்கான இணைந்த படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

----------------------------------------------------------------------

4.1 கொள்வனவுத் திட்டம்

-------------------------------

ரூபா 82,725,226 இற்கான மூலதனச் செலவுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டிற்கான கொள்வனவு திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

----------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டிருக்காமையால் குழு கூட்டங்கள் நடத்தப்படவில்லை.

4.3 அகக் கணக்காய்வு

----------------------------

மீளாய்வாண்டின் போது சபையின் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம், மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது 06 வருமான விடயங்களில் நூற்றிற்கு 20 முதல் நூற்றிற்கு 67 வரையும், 05 செலவு விடயங்களில் நூற்றிற்கு 17 முதல் 100 வரையும் முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

---------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றன.

(அ) மதிப்பீட்டு கட்டுப்பாடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) கடன் பட்டோர் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு